## அக்டோபர் – 30 – செவ்வாய்

### புனித ஜெரார்ட் மஜேலா

### இறையாட்சி புளிப்புமாவுக்கு ஒப்பாகும். லூக்.13:21

## முதல் வாசகம் : ஏபேசியர் 5 : 21 - 33

சகோதர சகோதரிகளே!,கிறிஸ்துவுக்கு அஞ்சி ஒருவருக்கொருவர் பணிந்திருங்கள்.திருமணமான பெண்களே, ஆண்டவருக்குப் பணிந்திருப்பதுபோல உங்கள் கணவருக்கு நீங்கள் பணிந்திருங்கள்.ஏனெனில் கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாய் இருப்பதுபோலக் கணவர் மனைவிக்குத் தலையாய் இருக்கிறார். கிறிஸ்துவே திருச்சபையாகிய உடலின் மீட்பர்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழி நடப்போர் பேறுபெற்றோர்.

## நற்செய்தி : லூக்கா 13 : 18 – 21

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தினரைப் பார்த்துக் கூறியதாவது : "இறையாட்சி எதற்கு ஒப்பாயிருக்கிறது? அதை நான் எதற்கு ஒப்பிடுவேன்? அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாகும். ஒருவர் அதை எடுத்துத் தம்தோட்டத்தில் இட்டார். அது வளர்ந்து மரமாயிற்று. வானத்துப் பறவைகள் அதன் கிளைகளில் தங்கின " என்று கூறினார். மீண்டும் அவர், "இறையாட்சியை எதற்கு ஒப்பிடுவேன்? அது புளிப்புமாவுக்கு ஒப்பாகும். பெண் ஒருவர் அதை எடுத்து மூன்று மரக்கால் மாவில் பிசைந்து வைத்தார். மாவு முழுவதும் புளிப்பேறியது" என்றார்.

**தியானம் :** .கடவுள் தம் அன்புப் பெருக்கால் மனிதனைப் படைத்தார் என அறிந்திருக்கின்றோம். அந்த அன்பு 'தூய திருத்துவமாக', அதாவது, 'பிதா, சுதன், தூய ஆவி' என்னும் மூவொருகடவுளாக இருந்தது. இது மிகப்பெரியதொரு மறையுண்மை. இதைப் புரிந்து கொள்ள எந்த மன சக்தியாலும் இயலாது. இதே அன்பை கடவுள் மனிதபடைப்பிலும் காணவிரும்பியதால், மனிதனை ஆணும், பெண்ணுமாகப் படைத்தார். கடவுளின் இந்த அன்புத் திட்டத்தை தீயவனான சாத்தான் கறைப்படுத்தினான். ஆனாலும், அதை மீண்டும் சீர்ப்படுத்த சுதனாகிய கடவுள் மனுவுரு எடுக்கவென ஒரு குடும்பத்தைத் தயார்ப்படுத்தினார். அதுதான், 'திருக்குடும்பம்'. எவ்வாறு அந்தத் திருக்குடும்பம் கடவுளின் முழுமையான அன்பைப் பிரதிபலித்ததோ, அதேபோன்று ஒவ்வொரு குடும்பங்களும் அன்பின் ஊற்றுக்களாக அமையவேண்டும் என்பதே கடவுளின் விருப்பமாகும். புனித பவுல் அப்போஸ்தலர் குடும்ப உறவையும், அன்பையும் திருச்சபைக்கு உதாரணமாகத் தருகின்றார். எவ்வாறு, ஒருகுடும்பம் ஒருவரைஒருவர் அன்பு செய்யவேண்டுமோ, அதுபோன்று திருச்சபைக் குடும்பமும் ஒருவரொருவர்மேல் அன்பும், கரிசனையும் கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கின்றது. திருச்சபைக் குடும்பத்துக்கு இறைமகன் கிறிஸ்து ஒருவரே தலைவர். அவரது போதனைகள் மட்டுமே அக்குடும்பத்தில் வாழப்படவேண்டிய வாழ்க்கை நெறிகள். மாறாக, சந்தர்ப்பம் சூழ்நிலைகருதி, பொருளாதார இலாபம் கருதி, அரசியல் உள்நோக்குகளோடு இறைவார்த்தைகளைக் கலந்து நாமே உருவாக்கிக் கொள்ளும் சட்டதிட்டங்களல்ல. எனவே, இறைவார்த்யையில் நிலைத்து வாழும் குடும்பங்கள் புளிப்புமாவுபோல, உலகம் முழுவதையும் புளிப்பேற்றவல்லது. குடும்பங்களில் அன்புறவை உருவாக்குவோம். அதை விதையாக நம் சமுதாயத்தில் விதைப்போம். கடவுள் அதைப் பெரிய விருட்சமாக மாற்றி பலரும் அதில் இளைப்பாறச் செய்வார்.